# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
# வருடாந்த செயற்றிறன் அறிக்கை
# Annual Performance Report

# 2017




## රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව
## அரசாங்க தகவல் திணைக்களம்
## Department of Government Information

# வருடாந்த செயற்றிறன் அறிக்கை - 2017

## அரசாங்க தகவல் திணைக்களம்

# எமது தூர நோக்கும் பணிக்கூற்றும்

## தூர நோக்கு

ஒரு பொறுப்பு மிக்கதும் சுயாதீனதுமான ஊடக கலாசாரத்தினைப் பேணுதல்.

## பணிக்கூற்று

இலங்கையிலுள்ள ஊடக சுற்றுச்சூழலில் பரஸ்பரம் மிக்க தொடர்பாடலை பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் ஊடகக் கலாசாரத்தை மேம்படுத்தல். அரசாங்கத்தின் தூரநோக்கை செயற்படுத்தல் சரியான தகவல்களை வழங்குதல் பொதுமக்களின் உரிமைகளை தீர்மானிப்பதற்கான தகுந்த சந்தர்ப்பத்தினை வழங்குதல்.

## நோக்கங்கள்

- அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்கள், தேசிய ரீதியான முக்கியத்துவமிக்க நடவடிக்கைகள் தொடர்பில் பொதுமக்களை விழிப்புணர்வூட்டல்.
- ஒரு மேம்பட்ட ஊடக கலாசாரத்தினை அபிவிருத்தி செய்தல்
- விசேட திட்டங்கள்,அபிவிருத்தி திட்டங்களினை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்ட அரசாங்கத்தின் செய்திகள் மற்றும் ஆவணப் படங்களை காட்சிப்படுத்தலும் பாதுகாத்தலும்.
- உயரிய இலக்குகளை அடைவதற்காக மனிதவளங்கள் மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்தலும் மேம்படுத்தலும்.
- உலக தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு ஏற்றாற் போல், (டிஜிட்டல்மயமாக்கம்) தகவல் தொழில்நுட்பத்தினை உலகமயமாக்கலின் அடிப்படையில் முகாமைத்துவம் செய்தல்.

## உள்ளடக்கம்


இதுவரை கடந்து வந்த பாதை – 1948 முதல் 2016 வரை

1. அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிகள்
   - 1.1 பங்களிப்பும் நோக்கமும்
   - 1.2 பிரதான செயற்பாடுகள்
2. நிர்வாகப் பிரிவு
   - 2.1 அறிமுகம்
   - 2.2 பணியாளர்கள்
   - 2.3 2017ம் ஆண்டில் பணியாளர்களின் மாற்றம்
   - 2.4 திணைக்கள பரீட்சை - 2017
   - 2.5 வெளிநாட்டு புலமைப்பரிசில் மற்றும் வெளிநாட்டு பயணங்கள் - 2017
3. நிதிப்பிரிவு
   - 3.1 அறிமுகம்
   - 3.2 2017ம் ஆண்டினுள் நிதி ஒதுக்கீடும் செலவீனமும்
   - 3.3 கணக்காய்வு
4. அபிவிருத்திப் பிரிவு
   - 4.1 அறிமுகம்
   - 4.2 அரசாங்க திரைப்படப் பிரிவு
   - 4.3 புகைப்படப் பிரிவு
   - 4.4 தெசதிய
   - 4.5 அரசாங்க வெளியீட்டுப் பணியகம்
   - 4.6 ஊடக அங்கீகாரப்பிரிவு
   - 4.7 ஆய்வு மற்றும் கண்காணிப்பு பிரிவு
   - 4.8 விசேட ஊடகப் பிரிவு
   - 4.9 பிரச்சாரப் பிரிவு

## இதுவரை கடந்து வந்த பாதை – 1948 முதல் 2016 வரை

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது ஏற்பட்ட இரண்டாம் உலக மகா யுத்த காலப்பரிவில் யுத்த தகவல்களை மக்கள் மத்தியில் பரிமாறிக் கொள்வதற்காக "War Information Centre" செயற்பட்டது.

உலக மகா யுத்தம் முடிவுற்றதன் பின்னர் அவ் யுத்த தகவல்களை வழங்கிய மத்திய நிலையமானது அரசாங்க அபிவிருத்தி தகவல்கள் தொடர்பில் மக்களை அறிவுறுத்துவதற்காக அரசாங்க தகவல் திணைக்களம் எனும் பெயரில் ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசாங்கம் மேற்கொள்கின்ற தேசிய அபிவிருத்தி பணிகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக வேண்டி பிரதான பணிகள் மூன்றினை அடிப்படையாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிறுவன வடிவமைப்பானது,

1. செய்தி வழங்குதல் பிரிவு
2. அரசாங்க புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளுக்கான நிறுவனம்
3. அரசாங்க திரைப்பட பிரிவு

இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக வேண்டி அநுபவமும், பாண்டித்தியமும் பெற்ற ஊடகவியலாளரும், பத்திரிகை கலைஞருமான எச்.ஏ.ஜே. ஹுலுகல்லை அவர்கள் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிராதன ஊடக அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

ஒரு சில குறிப்பிட்ட பணியாளர்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தின் உதவி ஊடக அதிகாரிகளாக பி.என். மெத்தேகொடை, எல்.ஆர். குணதிலக, எஸ்.பி.வெத்தசிங்க, பி.பிB. விஜேசிங்க ஆகியோர் பணியாற்றினர்.

அரச ஊடக கட்டமைப்பினுள் காணப்பட்ட வரையறைகளை இனங்கண்டு பொதுமக்களையும் அபிவிருத்தி பணிகளில் இணைத்துக் கொண்டு செல்லும் அரசாங்கத்தின் நோக்கத்தினை குறிப்பாக அரசாங்கத்தின் விவசாய நவோதயம், ஜனநாயத்தினை பலப்படுத்துதல், சர்வசன வாக்குரிமையில் பொதுமக்களின் பங்கு ஆகிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்களை அறிவுறுத்தும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணியினை வெற்றிகரமான முறையில் நிறைவேற்றுவதற்கு அரசாங்க திரைப்பட பிரிவு, வெளியீட்டு பணியகம் என்பன பாரியதொரு பங்களிப்பினை அன்றைய காலத்தில் வழங்கியிருந்தன.

ஆரம்பித்திலிருந்தே அரசாங்கத்தின் பிரச்சார நடவடிக்கைகளை தேசிய மட்டத்தில் மாத்திரமல்லாமல் சர்வதேச ரீதியாகவும் மேற்கொண்ட அரசாங்க தகவல் திணைக்களமானது இலங்கையின் வெளிநாட்டு தூதுவராலயங்களை இலக்காகக் கொண்டு துண்டு பிரசுரங்களையும் வெளியீடுகளையும் காலத்துக்கு காலம் பகிர்ந்தளிப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வந்தது. இக்காலப்பகுதியினுள் அவ்வாறு வெளியிடப்பட்ட "Week Happening in the

Island'' சஞ்சிகையும் ''Introduction Ceylon'' ஆகிய வெளியீடுகளின் மூலம் இலங்கை தொடர்பிலான விசேட தகவல்களை சர்வதேசத்துக்கு பெற்றுக் கொடுக்கும் பணியினை நிறைவேற்றியது.

அரசாங்க வெளியீட்டுப் பணியகத்தினையும் விரிவான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுத்துச் சென்று, அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பிரச்சாரங்கள் தொடர்பான சட்டங்களை பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்காக அச்சிட்டு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் ஆரம்ப அதிகாரியாக R.V.H.Vantwest என்பவர் பணியாற்றியுள்ளார்.

ஜூலியோ பெட்ரோனி அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க திரைப்படப் பிரிவு சுதந்திரத்தின் பின்னர் இந்நாட்டில் ஏற்பட்ட தேசிய அபிவிருத்தி தொடர்பில் பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக ஆவணப் படத்துறையின் ஊடாக பாரியதொரு பங்களிப்பினை வழங்கியுள்ளது. பின்னர் புகழ்பெற்ற ஆவண திரைப்பட இயக்குநர்கள் பலரை உருவாக்கிய இப்பிரிவானது இலங்கைக்கு பரிஸ் சர்வதேச திரைப்பட விருது வழங்கும் விழாக்கள் பலவற்றில் பல விருதுகளை வெற்றிக் கொள்வதற்கு வாய்ப்பாகவும் அமைந்தது.

இப்பணியினை காலத்தின் மாற்றத்திற்கேற்ப இன்றுவரை வெற்றிகரமாக முன்னெடுத்து வருவதற்கு அரசாங்க தகவல் திணைக்களத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப அதனையும் மாற்றியமைத்துக் கொண்டமையே காரணம் என கொள்ளப்படுகின்றது.

## 01. அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிகள்

அரச கொள்கைகள், அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் உள்ளடங்களாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த காலத்துக்கு தேவையான செயற்பாடுகள் மற்றும் பொதுமக்களுக்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் தொடர்பில் பொதுமக்களை அறிவுறுத்துவதே இத்திணைக்களத்தின் நோக்கமாக காணப்படுவதுடன், உலகளாவிய தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு அமைவாக தகவல் தொழில்நுட்ப செயன்முறையினை மேளாண்மைசெய்து சுதந்திரமானதும் பொறுப்புவாய்ந்ததுமான உயர் ஊடக கலாச்சாரத்தினை கட்டியெழுப்புவதற்காக வழிகாட்டுதல் மற்றும் தலைமைத்துவத்தினை வழங்குவதும் இதன் இலக்காக உள்ளது.

இவ்விலக்குகளை அடைந்துக் கொள்வதற்காக வேண்டி திணைக்களமானது தமது பணியாளர்களை வழிநடாத்துவதுடன், அதன் போது உத்தியோகத்தர் ஒருவர் தமது பொறுப்பினை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான அறிவு, தகைமை மற்றும் சூழல் என்பவற்றை தயார்படுத்தி கொடுக்கின்றது.

இதன் மூலம் அதி கூடிய அவதானம் திணைக்களம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் குறித்து செலுத்தப்படுவதுடன், திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளும் அந்நோக்கத்தினை அடைந்துக் கொள்வதற்காகவே செயற்படுகின்றன.

### 1.1 பங்களிப்பும் நோக்கமும்

அரசாங்க அபிவிருத்தி செய்திகளை பொதுமக்களிடத்தில் கொண்டு செல்லும் பிரதான பங்களிப்பினையும், அதனுடன் தொடர்பான ஏனைய நோக்கங்களை அடைந்துக் கொள்வதற்காக வேண்டி செயற்படுகின்ற அரசாங்க தகவல் திணைக்களமானது, அதற்காக பல்வேறு செயற்றிட்டங்களை தமது திட்ட வரைபினுள் உள்வாங்கி வருட ஆரம்பத்தினுள் அத்திட்டங்களுக்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்கின்றது.

அதன் பின்னர் வருடந்தோறும் அத்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதனை காணக்கூடியதாக உள்ளதுடன் அவ்வாறு அடைந்துக் கொள்வதற்கான நோக்கங்களை பிரதானமாக பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

- தரமான ஊடக சம்பிரதாயத்தினை உருவாக்குதல்.
- தகவல் அறிந்து கொள்ளும் உரிமையினை விருத்தி செய்வதற்காக வேண்டி அரசாங்க அபிவிருத்தி பிரச்சார தகவல்களை பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு செல்லல்.
- ஊடக விசாரணை செயன்முறையினை பலப்படுத்துதல்.

- நல்லாட்சி, நல்லிணக்கம், நிலைபேறான அபிவிருத்தி ஆகியவற்றை ஸ்தாபித்து கருத்து வெளியிடும் சுதந்திரத்தினை உறுதி செய்தல்.
- ஊடக துறைகளுக்கு உரித்தான ஆராய்ச்சி நடவடிக்கைகள், அபிவிருத்தி மற்றும் திட்டங்களை உருவாக்குதல்.

**பிரதான செயற்பாடுகள்**

மேற் குறிப்பிடப்பட்ட வகி பங்கினையும் நோக்கத்தினையும் அடைந்துக் கொள்வதற்காக திணைக்களத்தினால் செயற்படுத்தப்படுகின்ற பிரதான செயற்பாடுகளை கீழ்க்காணும் முறையில் வகைப்படுத்திக் காட்டலாம்.

- பிற அமைச்சுக்களால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளுக்கு உரிய அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள் (ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர்கள், ஊடக செயலாளர்கள், ஏனைய தரப்பினர்)
- ஊடக சந்திப்புக்களை ஒழுங்குபடுத்தல் (அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு, வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் பணிகளுடன் தொடர்பானவை)
- செய்தி அறிக்கைகளை வெளியிடல்.
- ஊடக கண்கானிப்பு சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்துதல்.
- அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பிலான ஆக்கங்கள் மற்றும் வெளியீடுகளை பிரசுரித்தல்.
- நவீன ஊடகங்களை பயன்படுத்தி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை பிரச்சாரப்படுத்துதல். (Face book, You tube, Twitter etc..)
- உள்ளூர் மற்றும் வெளியூர் ஊடகவியலாளர்களுக்காக ஊடக அடையாள அட்டைகளை வெளியிடல்.
- அன்றாட கண்கானிப்பு அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் தேவையின் அடிப்படையில் உரிய தரப்பினரை அறிவுறுத்தல்.
- காலத்திற்கு பொருத்தமான தலைப்புகள் மற்றும் ஊடக துறையின் நவீன முன்னேற்றகரமான பாதை தொடர்பில் ஆய்வு செய்தல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல்.
- ஆவணபடங்களை உருவாக்கி வெளியிடல்
- தேசிய நிகழ்வுகள், பாதுகாக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் போன்றவற்றினை ஒளி,ஒலிப்பதிவு செய்தல் மற்றும் அந்நிகழ்வுகளை புகைப்படமெடுத்து பாதுகாத்தல்.

## 02. நிர்வாகப் பிரிவு

### 2.1 அறிமுகம் :

நேர்த்தியான ஊடக சமூகத்தினை கட்டியெழுப்புவதற்கு அவசியமான பின்னணியினை இலங்கை சமூகத்தினுள் ஸ்தாபிப்பதே அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணியாகும். அதற்காக பயன்படுத்தப்படுகின்ற கொள்கைகளை தயாரித்தல், திணைக்கள பணியாளர் தொகுதியினரை நிர்வகித்தல், அமைச்சு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் அலுவலக ரீதியிலான தொடர்புகளை முன்னெடுத்துச் செல்ல என்பவையே நிர்வாகப் பிரிவின் பணிகளாகும். ஓட்டுமொத்தமாக நோக்குமிடத்து திணைக்களத்தின் நிர்வாக ரீதியான அனைத்து பணிகளையும் நிர்வாகப்பிரிவே மேற்கொள்கின்றது.

அரசாங்க பணிப்பாளர் நாயகத்திற்கு நேரடியாக பொறுப்புக் கூறலுக்கு இணைந்துள்ள, பணிப்பாளர் (நிர்வாகம்) பதவியினை கொண்ட உயர் அதிகாரி ஒருவரின் கீழ் வழிநடாத்தப்படுகின்ற நிர்வாகப்பிரிவின் பணிகளை பின்வருமாறு சுருக்கமாக வரையறுக்கலாம்.

- திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளதும் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- திணைக்களத்தின் தூர நோக்கு, பணியின் அடிப்படையில் கால மாற்றத்திற்கேற்ப மாறுபட வேண்டிய செயற்பாட்டு திட்டத்தினை தயாரித்தல், அதனடிப்படையில் பணி மேற்கொள்ளப்படுகின்றதா என மதிப்பீடு செய்து அறிக்கை தயாரித்தல்.
- திணைக்கள பணியாளர்களின் காலாண்டு அறிக்கையினை தயாரித்தல் மற்றும் தேவையின் அடிப்படையில் வினவுகின்ற நிறுவனங்களிடம் முன்வைத்தல்.
- கணக்காய்வு கேள்விகளுக்கு பதிலளித்தல்.
- திணைக்கள பணியாளர்களின் திருத்தங்கள், ஆட்சேர்ப்பு நடைமுறைகளை தயாரித்தல் மற்றும் திருத்தங்களை தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளல்.
- அன்றாட தபால் சேவையினை முறையாக பேணல்.
- திணைக்கள பணியாளர்களின் தனிப்பட்ட கோவைகளை முறையாக பேணல்.
- பணியாளர்களின் ஒழுக்க நெறிமுறைகளை பேணல்.
- திணைக்கள பணியாளர்களின் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, இடமாற்றம் மற்றும் ஓய்வுபெறல் போன்றவற்றுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- திணைக்களத்தின் சுத்தம் மற்றும் திணைக்கள வளாகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பணியாளர்கள் பயிற்சி தொடர்பிலான பணிகள்
- மேலதிக கொடுப்பனவு, நாளாந்த பணியாளர் கொடுப்பனவு போன்றவை தொடர்பிலான பணிகள்.
- பணியாளர்களின் வரவு, வெளியேறல் மற்றும் விடுமுறை தொடர்பிலான பணிகள்

- பணியாளர்களின் கடன், நீர் - மின் கட்டணங்கள், பத்திரிகை பற்றுசீட்டுகள், தொலைப்பேசி பற்று சீட்டுகள் மற்றும் வரி கொடுப்பனவுகள் தொடர்பிலான அலுவல்கள்.
- பணியாளர்களின் காப்புறுதி தொடர்பிலான அலுவல்கள்
- திணைக்களத்தின் களஞ்சியசாலை ஒருங்கிணைப்பு தொடர்பிலான அலுவல்கள்
- போக்குவரத்து தொகுதியினை முன்னெடுத்துச் செல்லல் மற்றும் திணைக்கள வாகனங்களின் பராமரிப்பு.
- காலத்தின் தேவைக்கிணங்க முன்னெடுக்கப்படுகின்ற பணிகள்.

## 2.2 பணியாளர்கள்:

முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் DMS/C/6/44/01-Vol-II ஆம் இலக்க மற்றும் 2012.08.20 ம் திதகிய கடிதத்தின் அடிப்படையில் இத்திணைக்களத்திற்காக அனுமதி வழங்கப்பட்ட, தற்போது பணியில் ஈடுபடுகின்ற பணியாளர்கள் பின்வருமாறு,

| இல. | பதவியின் பெயர் | உரித்தாகின்ற சேவை | தரம் / வகுப்பு | சம்பள அளவுத்திட்டம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 01. | அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் | இலங்கை நிர்வாகச் சேவை | விசேட | SL – 3- 2006 | 01 |
| 02. | அரசாங்க மேலதிக தகவல் பணிப்பாளர் நாயகம் | ஒப்பந்த அடிப்படையில் | - | - | 01 |
| 03. | பணிப்பாளர் (நிர்வாகம்) | இலங்கை நிர்வாகச் சேவை | I | SL – 1- 2006 | 01 |
| 04. | பணிப்பாளர் (அரசாங்க திரைப்படப்பிரிவு) | ஒப்பந்த அடிப்படையில் | - | | 01 |
| 05. | பிரதான கணக்காளர் | இலங்கை கணக்காய்வாளர் சேவை | I | SL – 1- 2006 | 01 |
| 06. | கணக்காளர் | இலங்கை கணக்காய்வாளர் சேவை | III, II | SL – 1- 2006 | 01 + |
| 07. | உதவி/ பிரதி செய்திப் பணிப்பாளர் | இலங்கை நிர்வாகச் சேவை | III, II | SL – 1- 2006 | 03 + |
| 08. | உதவி/ பிரதி செய்திப் பணிப்பாளர் | திணைக்களமயமான | III, II | SL – 1- 2006 | 03 + |
| 09. | தயாரிப்பாளர் | திணைக்களமயமான | III, II | SL – 1- 2006 | 01 + |
| 10. | நிர்வாக அலுவலர் | அரச முகாமைத்துவ உதவிச் சேவை | அதி | MN–7-2006 A | 01 |
| 11. | புகைப்படக் கலைஞர் | இலங்கை தொழில்நுட்ப சேவை | விசேட | MN–7-2006 A | 03 |
| 12. | தொழில்நுட்ப அலுவலர் | இலங்கை தொழில்நுட்ப சேவை | விசேட | MN–7-2006 A | 03 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | சிரேஷ்ட ஊடக அதிகாரி | திணைக்களமயமான | III, II, I | MN–7-2006 A | 05 |
| 14. | தகவல் மற்றும் தொடர்பாடல் அதிகாரி | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை | 2ம் வகுப்பில் II, I ம் தரம் | MN–6-2006 A | 01 |
| 15. | மொழிபெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை | II, I | MN–6-2006 A | 03 |
| 16. | தகவல் அதிகாரி | திணைக்களமயமான | III, II, I | MN–4-2006 A | 40 |
| 17. | பகுப்பாளர் | திணைக்களமயமான | III, II, I | MN–4-2006 A | 03 |
| 18. | தொகைமதிப்பு மற்றும் ஆராய்ச்சி அதிகாரி | திணைக்களமயமான | III, II, I | MN–4-2006 A | 01 * |
| 19. | திட்ட அலுவலர் | திட்ட அலுவலர் சேவை | III, II, I | MN–4-2006 A | 45 |
| 20. | புகைப்படக் கலைஞர் | இலங்கை தொழில்நுட்ப சேவை | III, II, I | MN–3-2006 A | 10 |
| 21. | நூலகர் | நூலகர் சேவை | III, II, I | MN–3-2006 A | 01 |
| 22. | தொழில்நுட்ப அலுவலர் | இலங்கை தொழில்நுட்ப சேவை | III, II, I | MN–3-2006 A | 10 |
| 23. | அரச முகாமைத்துவ உதவி | அரச முகாமைத்துவ உதவி சேவை | III, II, I | MN–2-2006 A | 35 |
| 24. | தட்டச்சாளர் | திணைக்களமயமான | III, II, I | MN–1-2006 A | 01 * |
| 25. | தகவல் எழுத்தாளர் | திணைக்களமயமான | III, II, I | MN–1-2006 A | 02 * |
| 26. | உதவி திரையரங்கு பொறுப்பாளர் | திணைக்களமயமான | III, II, I | MN–1-2006 A | 01 |
| 27. | வரவேற்பதிகாரி | திணைக்களமயமான | III, II, I | MN–1-2006 A | 01 * |
| 28. | திரைப்பட காட்டுனர் | திணைக்களமயமான | III, II, I | MN–1-2006 A | 02 |
| 29. | நெகடிவ் பொறுப்பாளர் | திணைக்களமயமான | III, II, I | MN–1-2006 A | 01 * |
| 30. | விற்பனை உதவியாளர் | திணைக்களமயமான | III, II, I | MN–1-2006 A | 07 |
| 31. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை | 3ம் வகுப்பில் III, II, I தரம் | MT–1-2006 A | 02 |
| 32. | தொழில்நுட்ப உதவி | திணைக்களமயமான | III, II, I | MT–1-2006 A | 08 |
| 33. | மோட்டர் மெக்கனிக் | திணைக்களமயமான | III, II, I மற்றும் விசேட | PL–3-2006 A | 01 * |
| 34. | வாகன ஓட்டுநர்கள் | ஒன்றிணைந்த ஓட்டுநர்கள் சேவை | III, II, I மற்றும் விசேட | PL–3-2006 A | 18 |
| 35. | இணைப்பு வேலை உதவி (பராமரிப்பு) | திணைக்களமயமான | III, II, I மற்றும் விசேட | PL–2-2006 A | 03 |
| 36. | இணைப்பு வேலை உதவி (வீடியோ உருவாக்கம்) | திணைக்களமயமான | III, II, I மற்றும் விசேட | PL–2-2006 A | 02 |
| 37. | இருட்டறை புகைப்பட | திணைக்களமயமான | III, II, I | PL–2-2006 A | 01 * |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அச்சகர் | | மற்றும் விசேட | | |
| 38. | அலுவலக பணி உதவியாளர்கள் | அலுவலக பணி உதவிச் சேவை | III, II, I மற்றும் விசேட | PL–1-2006 A | 28 |
| 39. | உதவிப் பகுப்பாளர் | ஒப்பந்த அடிப்படையில் | தேசிய ஊதியங்கள் மற்றும் பணியாளர் தொகை ஆணைக்குழுவின் சிபார்சின் பெயரில் மாதாந்த கொடுப்பனவு | | 05 |
| 40. | பணிப்பாளர் (இணையத்தள நிர்வாகம்) | ஒப்பந்த அடிப்படையில் | | | 01 |
| 41. | இணையத்தள பகுப்பாளர் (தமிழ், சிங்களம், ஆங்கிளம்) | ஒப்பந்த அடிப்படையில் | | | 03 |
| 42. | இணையத்தள எழுத்தாளர்கள் (தமிழ், சிங்களம், ஆங்கிளம்) | ஒப்பந்த அடிப்படையில் | | | 09 |
| | | | | **மொத்தம்** | **270** |

**+.** இப்பதவியானது உரிய சேவையில் III அல்லது II தரத்தின் பதவியாகும். புணியாளர் தொகையானது எல்லையின்றி பதவியுயர்வு வழங்கப்படுவதால், I ஆவது தரத்துக்கு அல்லது விசெட தரத்துக்கு பதவியுயர்வினை பெற்றதன் பின்னர் கூட, இப்பதவியிலேயே விட்டிருப்பதற்கு குறித்த அதிகாரிக்கு ஏற்படும். அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கையினுள் பணிபுரிகின்ற III தரத்தின் அதிகாரிகள் வேலை பார்க்கும் அடிப்படையில், II தரத்தின் பதவிகளுக்கு நியமித்தல் கூடாது.

***.** இப்பதவியினை வகிப்பவருக்கு தனிப்பட்ட ரீதியில் அமையும் வகையில், பின்னர் இரத்து செய்வதற்கு இணங்க,

மேலும், இதற்கு முன்னர் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றாற் போல், சேவை அவசியத்தின் கீழ் 2016-2017 வருடத்தில் மு.ரே. 71 விண்ணப்பத்தின் மூலம் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் சில பதவிகள் கீழ்வரும் வகையில் அங்கீகரித்துக் கொண்டது.

I. முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் DMS/C/6/44/01-(Vol-III) ம் இலக்க 2013.09.02ம் திகதிய கடிதத்தின் ஊடாக தற்போது பதவி வகிப்பவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அமையும் வகையில் அங்கீகரித்துக் கொண்ட 05 பதவிகள் உட்பட 15 தொழில்நுட்ப அதிகாரி பதவிகளும், தொழில்நுட்ப அதிகாரி (கட்டிட புனர் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு) பதவி ஒன்றுமாக மொத்தம் 16 பதவிகளை இத்திணைக்களத்துக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

II. முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் DMS/1134 ம் இலக்க 2015.09.10ம் திகதிய கடிதத்தின் ஊடாக 06 விசாரணை அலுவலர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டதை அடுத்து இத்திணைக்களத்துக்காக இதுவரை 30 விசாரணை அலுவலர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

III. முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் DMS/1134 ம் இலக்க 2016.07.07ம் திகதிய கடிதத்தின் ஊடாக மேலதிக பணிப்பாளர் நாயக பதவியானது இலங்கை நிர்வாக சேவையின் விசேட வகுப்புக்கான பதவியாக இத்திணைக்களத்துக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

IV. முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் DMS/1134/V-Iம் இலக்க 2016.10.11ம் திகதிய கடிதத்தின் ஊடாக பணிப்பாளர் (செய்தி) – திணைக்கள ரீதியிலான பதவியானது இத்திணைக்களத்துக்காக அங்கீகரிக்கப்பட்டது.

V. முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் DMS/1134ம் இலக்க 2014.09.29ம் திகதிய கடிதத்தின் ஊடாக இணையத்தள அபிவிருத்தி (ஒரு வருடத்துக்கான ஒப்பந்த காலத்தின் அடிப்படையில்) பதிவியொன்று இத்திணைக்களத்துக்காக அங்கீகரிக்கப்பட்டது.

VI. முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் DMS/1134ம் இலக்க 2016.06.02ம் திகதிய கடிதத்தின் ஊடாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினை புனரமைப்பு செய்யும் காரணத்தினால் இத்திணைக்களத்துக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட 08 அதிகாரிகளும் (உதவி பணிப்பாளர் (ஊடகம்) – 01, தகவல் அதிகாரி – 03, புகைப்படக் கலைஞர் - 02, கமரா செயற்பாட்டாளர் (ஒளிப்பதிவு) – 01 மற்றும் கமரா உதவியாளர் - 01) பதவி வகிப்பவருக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் இத்திணைக்கள பணியாளர் தொகுதியுடன் இணைத்துக் கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்டது.

VII. முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் DMS/C/6/44/01-(Vol-III)ம் இலக்க 2013.09.24ம் திகதிய கடிதத்தின் ஊடாக இலங்கை கணக்காய்வாரள் சேவையின் III/II தரத்திலான பதவியொன்று இத்திணைக்களத்துக்காக அங்கீகரிக்கப்பட்டது.

VIII. முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் DMS/C/6/44/01-(Vol-III)ம் இலக்க 2013.09.03ம் திகதிய கடிதத்தின் ஊடாக பக்க வடிவமைப்பு பகுப்பாளர் (ஒப்பந்த அடிப்படையில்) பதவியொன்று இத்திணைக்களத்துக்காக அங்கீகரிக்கப்பட்டது.

IX. முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின் DMS/C/6/44/01-(Vol-II)ம் இலக்க 2012.10.22ம் திகதிய கடிதத்தின் ஊடாக அபிவிருத்தி உத்தியோகத்தர் (செய்தி) – அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பதவிகள் 30 இனை இத்திணைக்களத்துக்காக அங்கீகரிக்கப்பட்டது.

**2.3** 2017ம் ஆண்டில் பணியாளர்களின் மாற்றம்

**புதிய ஆட்சேர்ப்புகள் :**

I. 2017.01.02ம் திகதியிலிருந்து அலுவலக சேவையாளர் சேவைக்கு தற்காலிக பதவியொன்றுக்காக அதிகாரி ஒருவர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

II. 2017ம் ஆண்டின் முதல் காலண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏழு பேரும், அரச முகாமைத்துவ உதவியாளர் 06 பேருமாக அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் மூலம் நியமிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

III. 2017.03.02ம் திகதியிலிருந்து அலுவலக சேவையாளர் சேவையில் தற்காலிக பதவிக்காக ஒருவர் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

IV. 2017.03.22ம் திகதியிலிருந்து நிர்வாக அதிகாரி பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் அதிகாரியொருவர் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

V. 2017.07.11ம் திகதியிலிருந்து இணையத்தள எழுத்தாளர் (சிங்களம்) – ஒப்பந்த பதவிக்காக அதிகாரியொருவர் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

VI. 2017.09.01ம் திகதியிலிருந்து இணையத்தள எழுத்தாளர் (தமிழ்) – ஒப்பந்த பதவிக்காக அதிகாரியொருவர் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

**ஓய்வுப்பெறல் :**

I. 2017.01.27ம் திகதியிலிருந்து உதவி செய்திப் பணிப்பாளராக பணியாற்றிய அதிகாரியொருவர் ஓய்வு பெற்றுள்ளார்.

II. 2017.02.16ம் திகதியிலிருந்து தகவல் அதிகாரியாக செயற்பட்ட அதிகாரியொருவர் ஓய்வு பெற்றுள்ளார்..

III. 2017.03.05ம் திகதியிலிருந்து செய்தி எழுத்தாளராக பணியாற்றிய அதிகாரியொருவர் ஓய்வு பெற்றுள்ளார்.

IV. 2017.03.22ம் திகதியிலிருந்து நிர்வாக அதிகாரியாக பணியாற்றிய அதிகாரியொருவர் ஓய்வு பெற்றுள்ளார்.

V. 2017.04.16ம் திகதியிலிருந்து தொழில்நுட்ப அதிகாரியாக பணியாற்றிய அதிகாரியொருவர் ஓய்வு பெற்றுள்ளார்.

VI. 2017.07.16ம் திகதி அலுவலக சேவையாளர் சேவையில் பணியாற்றிய அலுவலர் ஒருவர் மரணித்துள்ளார்.

VII. 2017.09.19ம் திகதியிலிருந்து அரச முகாமைத்துவ உதவியாளராக பணியாற்றிய அதிகாரியொருவர் ஓய்வு பெற்றுள்ளார்.

**<u>பதவியினை துறந்து செல்லுதல்/ சேவையிலிருந்து விலகுதல்</u>**

I. 2017.02.20ம் திகதியிலிருந்து வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் உதவியாளராக பணியாற்றிய அதிகாரி ஒருவர் சேவையினை விட்டுச் சென்றதாக கருமமாற்றியுள்ளார்.

II. 2017.03.31ம் திகதியிலிருந்து பகுப்பாளர் - சிங்களம் பதவியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்த அதிகாரியொருவர் சேவையிலிருந்து இடை விலகியுள்ளார்.

III. 2017.09.29ம் திகதியிலிருந்து அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றிய அதிகாரியொருவர் சேவையிலிருந்து இடை விலகியுள்ளார்.

## 2.4 திணைக்கள பரீட்சைகள் - 2017 :

I. 2017.07.14 – அரசாங்க தகவல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி – தொழில்நுட்ப சேவை பிரிவின் (MN 03 - 2016) தொழில்நுட்ப அதிகாரி (கட்டிட மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்பு) திறந்த பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை.

II. 2017.09.09 - அரசாங்க தகவல் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவி – தொழில்நுட்ப மட்டம் 03 சேவை பிரிவின் (MT - 01 - 2016) தொழில்நுட்ப உதவி திறந்த பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை.

III. 2017.07.11 - அரசாங்க தகவல் திணைக்களத்தின் இணை அதிகாரி பிரிவின் கீழ் சேர்த்துக் கொண்டு சேவையில் ஈடுபடுகின்ற III, II மற்றும் I வகுப்பின் தகவல் அதிகாரிகளுக்காக தடைத்தாண்டல் பரீட்சை நடாத்தப்பட்டது.

## 2.5 வெளிநாட்டு புலமைப்பரிசில் மற்றும் வெளிநாட்டு பயணங்கள் - 2017

I. 2017.05.01ம் திகதி தொடக்கம் 2017.05.05ம் திகதி வரை இந்துனேஷியாவில் இடம்பெற்ற "World Press Freedom Day – 2017" மாநாட்டில் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரங்க கலன்சூரிய அவர்கள் கலந்துகொண்டார்.

II. 2017.06.28ம் திகதி தொடக்கம் 2017.07.02ம் திகதி வரை சுவிட்சர்லாந்தில் இடம்பெற்ற "UN Plan of Action" மாநாட்டில் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரங்க கலன்சூரிய அவர்கள் கலந்துகொண்டார்.

III. 2017.08.11ம் திகதி தொடக்கம் 2017.08.13ம் திகதி வரை மியன்மாரில் இடம்பெற்ற "Transposition Forum" மாநாட்டில் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரங்க கலன்சூரிய அவர்கள் கலந்துகொண்டார்.

IV. 2017.11.27ம் திகதி தொடக்கம் 2017.12.01ம் திகதி வரை ஜனாதிபதி அவர்கள் கொரியாவில் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் ஊடக அறிக்கையிடலுக்காக தொழில்நுட்ப அதிகாரி, எல்.ஏ.எல். சிகேரா அவர்கள் கலந்துகொண்டார்.

V. "Photographic Association of Dum Dum" நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்காக வேண்டி தொழில்நுட்ப உதவியாளர், எம்.எம். யமுனி ரஷ்மிகா அவர்கள் 2017.01.22ம் திகதியிலிருந்து 2017.02.01ம் திகதி வரை இந்தியாவிற்கு சென்றிருந்தார்.

VI. சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட புலமைப்பரிசிலின் அடிப்படையில் பாடநெறியொன்றை தொடர்வதற்காக வேண்டி வேலைத்திட்டத்தினை செயற்படுத்தும் உதவியாளர், ஜீ.என்.பி. பெரேரா அவர்கள் 2017.02.21ம் திகதியிலிருந்து 2017.12.20ம் திகதி வரை சீனாவுக்கு விஜயம் செய்தார்.

VII. சீன அரசாங்கத்திடமிருந்து கிடைத்த அழைப்பின் பெயரில் 2017.05.17ம் திகதியிலிருந்து 2017.06.06ம் திகதி வரை சீனாவின் பீஜிங் நகரில் இடம்பெற்ற மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக அதிகாரிகள் 03 பேர் அங்கு சென்றனர்.

VIII. சீன அரசாங்கத்திடமிருந்து கிடைத்த அழைப்பின் பெயரில் 2017.05.18ம் திகதியிலிருந்து 2017.06.07ம் திகதி வரை சீனாவின் பீஜிங் நகரில் இடம்பெற்ற மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக அதிகாரிகள் 03 பேர் அங்கு சென்றனர்.

IX. சீன அரசாங்கத்திடமிருந்து கிடைத்த அழைப்பின் பெயரில் 2017.05.25ம் திகதியிலிருந்து 2017.06.14ம் திகதி வரை சீனாவின் பீஜிங் நகரில் இடம்பெற்ற மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக அதிகாரிகள் 03 பேர் அங்கு சென்றனர்.

X. சீன அரசாங்கத்திடமிருந்து கிடைத்த அழைப்பின் பெயரில் 2017.08.09ம் திகதியிலிருந்து 2017.08.09ம் திகதி வரை சீனாவின் பீஜிங் நகரில் இடம்பெற்ற மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக அதிகாரிகள் 04 பேர் அங்கு சென்றனர்.

XI. சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட புலமைப்பரிசிலின் அடிப்படையில் பாடநெறியொன்றை தொடர்வதற்காக வேண்டி வேலைத்திட்டத்தினை செயற்படுத்தும் உதவியாளர், எல்.நதீகா குணசேகர அவர்கள் 2017.09.04ம் திகதியிலிருந்து 2018.07.31ம் திகதி வரை சீனாவுக்கு விஜயம் செய்தார்.

XII. சீன அரசாங்கத்திடமிருந்து கிடைத்த அழைப்பின் பெயரில் 2017.09.04ம் திகதியிலிருந்து 2017.09.26ம் திகதி வரை சீனாவின் பீஜிங் நகரில் இடம்பெற்ற மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக அதிகாரிகள் 04 பேர் அங்கு சென்றனர்.

XIII. சீன அரசாங்கத்திடமிருந்து கிடைத்த அழைப்பின் பெயரில் 2017.09.06ம் திகதியிலிருந்து 2017.09.28ம் திகதி வரை சீனாவின் ஹூனான் நகரில் இடம்பெற்ற மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக அதிகாரிகள் 03 பேர் அங்கு சென்றனர்.

XIV. இந்தியாவில் இடம்பெற்ற பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்காக 2017.10.07ம் திகதியிலிருந்து 2017.10.15ம் திகதி வரை அதிகாரிகள் இருவர் கலந்து கொண்டனர்.

XV. 2017.10.31ம் திகதியிலிருந்து 2017.11.08ம் திகதி வரை ஹொங்கொங் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற "International Program on Management" பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்காக வேண்டி பணிப்பாளர் (நிர்வாகம்) நிர்மலி பிரியங்கனி குமாரகே அவர்கள் அங்கு சென்றார்.

## 03. நிதிப்பிரிவு

### 3.1 அறிமுகம் :

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கணக்கு பிரிவானது பிரதான கணக்காளரின் கீழ் செயற்படுவதுடன், அப்பிரிவில் கணக்காளர் ஒருவர் மற்றும் 16 அதிகாரிகள் பணிபுரிகின்றனர். திணைக்களத்துடன் தொடர்பான அனைத்து கொடுப்பனவுகள், வேதன கொடுப்பனவுகள், வருமானம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான ஆவணங்களை பேணல் மற்றும் திணைக்களத்தின் கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பவை நிதிப்பிரிவின் பணிகளாகும். 2017ம் ஆண்டுக்கான திணைக்களத்தின் நிதி நடவடிக்கைகள் இணைப்பு 01இல் காட்டப்பட்டுள்ளது.

### 3.2 2017ம் ஆண்டினுள் நிதி ஒதுக்கீடும் செலவீனமும்

வேலைத்திட்டம்-2017ம் ஆண்டில் 99 மில்லியன் ரூபா மதிப்பான 04 வேலைத்திட்டங்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் நிதி கிடைக்காமையினால் அவ்வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முடியாமல் போனது.

அதனடிப்படையில், 2017ம் ஆண்டினுள் அனுமதி வழங்கப்பட்ட பின்வரும் வேலைத்திட்டங்களை நிதி கிடைக்கப் பெறாமையினால் 2018ம் ஆண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

01. TV மற்றும் Radio பரிசீலனை மற்றும் மதிப்பீட்டு வேலைத்திட்டம் -ரூ.25 மில்லியன்
02. திணைக்கள கேட்போர் கூடத்துக்காக வெளிச்சத்தினை வழங்கும் பிரிவொன்றை ஸ்தாபித்தல் -ரூ.14 மில்லியன்
03. தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டம் Wi – Fi பயன்படுத்தி விருத்தி செய்தல் -ரூ.12 மில்லியன்
04. அரசாங்க திரைப்பட பிரிவிற்காக நவீன உபகரணங்கள் கொள்வனவு -ரூ.48 மில்லியன்

**மொத்தம் - ரூ.99 மில்லியன்**

## 3.3 கணக்காய்வு

திணைக்களம் தொடர்பில் 2017ம் ஆண்டில் கணக்காய்வாரள் திணைக்களத்தினால் 12 கணக்காய்வு அறிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. 2017ம் ஆண்டுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் இதுவரை 07 அறிக்கைகளுக்கு விளக்கமளிக்கப்படவில்லை. 2017ம் ஆண்டு அவற்றில் 13 அறிக்கைகளுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.

திணைக்களம் தொடர்பில் 2017ம் ஆண்டில் உள்ளக கணக்காய்வு பிரிவினால் 03 கணக்காய்வு அறிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், 2017ம் ஆண்டுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் இதுவரை 11 அறிக்கைகளுக்கு விளக்கமளிக்கப்படவில்லை. 2017ம் ஆண்டு அவ்வனைத்து அறிக்கைகளுக்கும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

# 04. அபிவிருத்திப் பிரிவு

## 4.1 அறிமுகம்

அரச கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி செய்திகளை மக்கள்மயமாக்குவதற்காக திணைக்களத்தின் கீழ் பல்வேறு விசேட பிரிவுகள் செயற்பட்டு வருகின்றன. இப்பிரிவுகளின் மூலம் பிரதானமாக அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் செய்திகளை மக்கள் மயப்படுத்தல் மற்றும் அரசாங்கத்தின் எதிர்கால இலக்குகள் தொடர்பில் மக்களை அறிவுறுத்துவதுமே எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில், பல்வேறு பிரிவுகளின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதோடு, பிரதான பிரிவுகளும் அவற்றின் செயற்பாடுகளும் பின்வருமாறு,

- அரசாங்க திரைப்படப் பிரிவு
- புகைப்படப் பிரிவு
- தெசதிய
- அரசாங்க வெளியீட்டுப் பணியகம்
- ஊடக அடையாள அட்டைப்பிரிவு
- ஊடக ஆய்வு மற்றும் கண்காணிப்பு பிரிவு
- விசேட ஊடகப் பிரிவு
- பிரச்சாரப் பிரிவு

## 4.1 அரசாங்க திரைப்படப் பிரிவு

அரசாங்க திரைப்படப் பிரிவு 1948 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் பணிப்பாளராக இத்தாலியைச் சேர்ந்த திரைக்கதை எழுத்தாளரும் இயக்குனருமான ஜூலியோ பெற்றோனி (Giulio Petroni) (1917 - 2010) வரை பதவி வகித்தார்.

தேசிய முக்கியத்துவம் மிக்க நிகழ்வுகளில் செய்தி சேகரிப்புக்களிலும் ஆவணப் படத் தயாரிப்புக்களிலும் ஈடுபடவென

இப்பிரிவு ஒப்படைக்கப்பட்டது. இப் பிரிவின் மூலம் தயாரிக்கப்படும் ஆவணப்படங்கள் சினிமாக்களில் திரையிடப்பட்டன. அத்துடன் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பொதுக்கல்விக்காகவும் இவை பயன்படுத்தப்பட்டன. இத் திரைப்படப் பிரிவானது தன்னகத்தே தயாரிப்பு, தொகுப்பாக்கம், நிற ஆய்வகம், ஒலிப்பிரிவு, திரைப்பட அரங்கு மற்றும் காப்பகம் ஆகிய பிரிவுகளை கொண்டுள்ளது.

இவற்றுள் நிற ஆய்வகத்தினை தன்னகத்தே கொண்டுள்ளமையானது மிகவும் பெரியதொரு திருப்புமுனையாக குறிப்பிட்டுக் கூறக்கூடியது. 1981 ஆம் ஆண்டில் ஜேர்மன் நாட்டின் உதவியுடன் இவ் ஆய்வகமானது நிற ஆய்வகமாக மாற்றப்பட்டது. திரைப்படக் காப்பகமானது இத்திணைக்களத்தின் பெறுமதி மிக்க சொத்தாக குறிப்பிட்டுக் கூறக்கூடியதொன்றாகும்.

நாடு சுதந்திரமடைந்த காலந்தொட்டு இவ் திரைப்பட பிரிவினரால் தயாரிக்கப்பட்ட அனைத்து ஆவணப்படங்களும் இறுவட்டுக்களில் பதிவு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு பாதுகாக்கப்படும் ஒலி ஒளி நாடாக்களிலுள்ள தகவல்கள் பழைய திரைப்பட தகவல்கள் வேறு ஊடக நிறுவனங்களின் தேவைக்கேற்ப வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் வீடியோவின் நேரத்திற்கேற்ப பணம் அறவிடப்படும். எனவே வெளியக ரீதியிலான திரைப்பட காட்சிப்படுத்தல்களுக்கு தேவையான வளங்களை வழங்கி உதவுதலும் அரசாங்க திரைப்படப் பிரிவின் இன்னொரு சேவையாக அமைகின்றது.

மேலும், புகழ்பெற்ற கலைஞர்களின் சேவையின் ஆரம்ப புள்ளியாக அமைந்தது இப்பிரிவின் வழிகாட்டலும் ஆசிர்வாதமுமே என்பது அவர்களின் அங்க அசைவுகளில் இருந்து தெளிவாகின்றது. அவற்றில் குறித்துறைக்கத்தக்க நபர்தான் கலாநிதி லேஸ்டர் ஜேம்ஸ் பிரிஸ் ஆவார். வெளிநாடு சென்று திரும்பிய கலாநிதி லேஸ்டர் ஜேம்ஸ் பிரிஸ் அவர்கள் தனது பணியினை ஆரம்பித்தது அரசாங்க திரைப்பட பிரிவிளாகும். ஆவரின் முதலாவது சினிமா படைப்பான **ரேகாவுக்கு** தேவையான பின்னணி உருவாக்கத்துக்கு திரைப்பட பிரிவின் அனுபவங்களே காரணமாக அமைந்தது.

அதுமாத்திரமல்லாமல், திஸ்ஸ லியனசூரிய, சுகதபால செனரத் யாப்பா, திஸ்ஸ அபேசேகர, டய்டஸ் தொடவத்தை போன்ற சினிமா துறையில் முதன்மை வகிப்பவர்கள் கூட தமது அடித்தளத்தினை அரசாங்க திரைப்பட பிரிவின் மூலம் பெற்றுக் கொண்டமை இப்பிரிவின் சுவிசேட விடயமாகும்.

இவ்வாறான வரலாற்றினை கொண்டுள்ளதைப் போன்று பழைய ஞாபகங்களை மீட்டிப் பார்ப்பதற்கான கலையார்வத்தினையும்
இப்பிரிவானது அதிகரித்தது. அவை, அரங்கு வசதிகளற்ற கிராமங்களை இலக்காகக் கொண்டு திரையிடப்பட்ட ஆவண மற்றும் பழைய திரைப்படங்களின் வாயிலாகவே அவ்வாறு கலையார்வத்தினை அதிகரித்தது. அதற்கெனவே விசேடமாக தயாரிக்கப்பட்ட வாகனத்தினை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இப்பயணங்களின் பிரதான நோக்கமானது, அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மக்கள் மயப்படுத்துவதேயாகும். தனது பணியினை முறையாக மேற்கொண்ட இப்பிரிவானது காலப்போக்கில் மக்கள் மத்தியில் பிரசித்தம் பெற்ற நிறுவனமாக மாற்றம் கண்டது.

இதன் வரலாற்று பயணத்தில் மிக முக்கியதொரு திருப்பு முனையாக 2017ம் ஆண்டில் **உத்தமாபிவந்தனா** நிகழ்ச்சிகளை விசேடமாக முன்னெடுத்தமையினை குறிப்பிடலாம். அந்நிகழ்வில் கலாநிதி லேஸ்டர் ஜேம்ஸ் பிரிஸ், சுகதபால செனரத் யாப்பா, திஸ்ஸ லியனசூரிய மற்றும் கீர்த்தி ஸ்ரீ பெரேரா ஆகிய கலைஞர்கள் அரசாங்க திரைப்பட பிரிவினால் கௌரவிக்கப்பட்டனர்.
கடந்த வருடத்தில் இப்பிரிவிற்கு இணைக்கப்பட்ட புதிய அம்சமாக **ஆவண நாடகத் தொடர்** (Docu-drama) காணப்படுகின்றது. இதன் ஊடாக ஆவண படங்களை தயாரித்தல் புதிய துறையின் பால் நகர்கின்றது.

புகழ்பெற்ற வரலாற்றினை கொண்டிருந்த போதும், பதவி வெற்றிடங்கள், இணைத்துக் கொள்ளல் மற்றும் பதவி உயர்வுகள் தாமதித்தல் போன்ற காரணங்களினால் கவனிப்பாரற்று கிடக்கின்ற திரைப்படப் பிரிவின் பால் 2017ம் ஆண்டில் கவனத்தினை செலுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்தது. அதனடிப்படையில், நவீன தொழில்நுட்ப உபகரணங்களினால் ஆன பரிபூரண பிரிவாக மாற்றுவதற்கான அடித்தளம் இடப்பட்டது. எனினும் திணைக்களத்தின் தூர நோக்கு மற்றும் பணியினை யதார்த்தமாக்குவதற்காக பல்வேறு அம்சங்களை இப்பிரிவின் கீழ் 2017ம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4.2 புகைப்படப் பிரிவு

அரசாங்க திரைப்பட பிரிவிற்கு அப்பாற்பட்டு தகவல் திணைக்களத்தின் கீழ் இயங்கி வருகின்ற ஒரு பிரிவே புகைப்பட பிரிவாகும். அப்பிரிவானது பழைய ஞாபகங்களை களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள காப்பகமாகும். முக்கியமான பல சமூக அரசியல் கலை கலாசார

அபிவிருத்தி நிகழ்வுகளின் போது பயன்படுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான படச்சுருள்கள் இதன் காப்பகத்தில் பேணிவைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஊடகங்களின் தேவைகளுக்காகவும் கல்வித் தேவைகளுக்காகவும் பல்வேறு வகையிலான நிறுவன தேவைகளுக்காகவும் தேவையான புகைப்படங்களை வழங்கி வைப்பது இவ் புகைப்படப் பிரிவின் மேலதிக சேவையாக கருதப்படுகின்றது. அத்துடன் அரசினால் கண்காணிக்கப்படும் தேசிய மற்றும் வெளிநாட்டு நிகழ்வுகள் இப்பிரிவினரால் அலுவலக ரீதியில் கண்காணிக்கப்படுகின்றது.

## 4.3 தெசதிய

சிங்கள மொழியில் வெளியாகும் மாதாந்த சஞ்சிகையாக தெசத்திய சஞ்சிகை விளங்குகின்றது. ஊடகவியல் மற்றும் இதழியல் பாணிகளை நாட்டில் இடம்பெறும் நடப்பு விவகாரங்களுடன் பகுப்பாய்வு செய்து கொண்டு சஞ்சிகை வடிவில் வெளியிடுகிறது. முதலாவது மாதாந்த சஞ்சிகை 1978 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளிவந்தது. அப்போது நாட்டின் பல பாடசாலைகள், பொதுநூலகங்கள் மற்றும் பல சந்தாதாரர்களுக்கு இப்புத்தகங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது.

எனினும் இதுவரை அரசாங்க அச்சகத்தினால் பணம் அறவிடப்படாத அடிப்படையில் அச்சிடப்பட்ட தெசதிய சஞ்சிகையானது அவ்வடிப்படையில் இருந்து விடுபடுவதற்கு யோசனைகள் முன்மொழியப்பட்டதும், மாதாந்த சஞ்சிகையாக வெளியிடுவதன் காரணத்தினால் அது தொடர்பில் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதற்கான வாய்ப்பு குறைந்து வருவதால் அதனை நவீனமயப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் 2017ம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது.

அதன் நேரடி பலனை 2018ம் ஆண்டில் எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கும் என்பதுடன் அதன் மூலம் இதன் தரத்தினை அதிகரிக்க முடியும் என்பதுடன் தொடர்ந்தும் திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்துக் கொள்வதற்கான வாய்ப்பு அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தெசதிய சஞ்சிகைகளுக்கு மேலதிகமாக திணைக்கள ஏனைய வெளியீடுகளும் இதன் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. அவற்றுள் ஏனைய திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளுக்கான குறிப்புக்களும் உள்ளடங்குகின்றன. விசேடமாக சுதந்திரத்தினத்திற்காக அச்சிடப்படுகின்ற பிரசுரங்கள், தகவல் அறியும் உரிமை சட்டத்தினை பிரபல்யப்படுத்துவதற்கான

கிரந்தங்கள், தேசத்துரோகிகளாக பிரகடனப்படுத்தப்பட்டவர்களை தேசிய வீரர்களாக பிரகடனப்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட ஆவணம் போன்றவை அவற்றுக்கு சில உதாரணங்களாகும்.

### 4.4 அரசாங்க வெளியீட்டுப் பணியகம்

அரசாங்கத்தின் பிரசுரங்களை பொதுமக்கள் வசம் கொண்டு செல்வதற்காக அரசாங்க தகவல் திணைக்களத்தின் கீழ் ஆரம்பத்தில் இருந்தே முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பிரிவாக அரசாங்க வெளியீட்டுப் பணியகம் காணப்படுகின்றது.

அதனடிப்படையில்,அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் சட்டமூலங்கள், வரைபுகள் அரசாங்க வர்த்தமானி பாராளுமன்ற செயற்பாடுகள் சட்ட அறிக்கைகள் போன்றவற்றினை மக்களுக்கு வழங்கும் உன்னத சேவையை ஆற்றி வருகின்றது.

தற்போது கொழும்பு 05, பொல்ஹேன்கொடை பிரதான அலுவலகத்திலும், காலி மாவட்ட செயலகத்திலும் இப்பணியகம் தமது கிளைகளை கொண்டுள்ளதுடன், முன்னைய காலங்களில் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் இதன் கிளை வேரூன்றி காணப்பட்டது.

எனினும் அரசாங்க அச்சகத்தினால் தனியாக தமது அச்சுப் பிரதிகளை வெளியிடும் வகையில் விற்பனை கூடமொன்று முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இதன் விளைவினால் தொடர்ந்தும் அரசாங்க வெளியீட்டுப் பணியகத்தினை கொண்டு செல்வதா என்பது குறித்த கவனம் செலுத்துவதற்கான சூழல் இன்று தோன்றியுள்ளது.

### 4.5 ஊடக அங்கீகாரப் பிரிவு

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் தமது ஊடகவியல் பணியில் எவ்வித தடங்கலுமின்றி செயற்படும் விதத்தில் ஊடகவியலாளர்களுக்கு அடையாளஅட்டைகளை பகிர்ந்தளிக்கும் சேவையினை இப்பிரிவு மேற்கொள்கின்றது. ஊடகவியலாளர்களுக்கென வழங்கப்படும் அடையாள அட்டைகளில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற ஒரேயொரு அடையாள அட்டையாக இது கருதப்படுகின்றது. வெளிநாட்டு அமைச்சின் ஒப்புதலுடன் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு அவர்களின் விசா காலஎல்லையை பொறுத்து தற்காலிக அடைய அட்டைகளும் வழங்கப்படுவது வழக்கமாகும்.

ஊடக நிறுவனங்களின் பிரதானிகளின் சிபார்சின்

அடிப்படையில் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற இவ் ஊடக அடையாள அட்டையுடன் தொடர்புடைய நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் தொடர்பில் வர்த்தமானியின் ஊடாக பொதுமக்கள் அறிவுறுத்தப்படுவதுடன் கால மாற்றத்திற்கேற்ப குறித்த விடயங்களின் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

நிறுவனங்களினுள் பணிபுரிகின்ற இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களை சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு பயன்படுத்த கூடிய ஊடக அடையாள அட்டையும், பிரதேச ஊடகவியலாளர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு பயன்படுத்த முடியுமான அடையாள அட்டையும் பெற்றுக் கொடுக்கப்படும்.
வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு ஊடக அடையாள அட்டைகளை வழங்கும் போது வெளி விவகார அமைச்சின் சிபார்சு கவனத்திற் கொள்ளப்படும். மேலதிக தகவல்கள் தேவைப்படும் பட்சத்தில் குறித்த வெளிநாட்டு ஊடக நிறுவனம் தொடர்பில் இணையம் வழியாக தகவல்கள் பெறப்பட்டு உறுதி செய்யப்படும்.

## 4.6 ஆய்வு மற்றும் கண்கானிப்பு பிரிவு

